காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

9—1—72

★

உள்ளே......

முஜிபுர் ரகுமான் விடுதலை?

(தலையங்கம்)

கடற்கரைக் கோயில்!

(சிறுகதை)

நட்பும் வளரட்டும் வெடி மருந்தும் உலரட்டும்!

(சிறப்புக் கட்டுரை)

சோழமாதேவி

(தொடர்கதை)

விலை 25 காசு

இந்திய பால்பண்ணை வளர்ச்சி வாரியத் தலைவர் டாக்டர். வி. குரியன் தமிழக முதல்வர் கலைஞரை அண்மையில் சந்தித்தார். பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் இராசாராமும் உடனிருக்கிறார்.

கடற்கரைக் கோயில்!

புலவர்
தி. நா. அறிவு ஒளி

மழை பொழியும் நாளில் மாமல்ல புரத்தைக்கண்டு மகிழவேண்டு மென்றெண்ணிப் புறப்பட்டு விட்டேன். பேருந்து வண்டியில் மழைத் துளிகள் குத்து விட்டுத் தாமே உடைந்து விழுந்து சிதறின. அவற்றின் குருதி வெள்ளம் ஓரங்களில் வழிந்து சொட்டியது. குளிரின் ஆட்சி உடலை மட்டுமின்றி உள்ளத்தையும் முடக்கியது.

மாமல்ல புரத்தில் இறங்கிக் குடையைப் பிடித்தவாறு கடற்கரை நோக்கிச் சென்றேன்.

குளித்து முழுகிச் சொட்டுகின்ற தண்ணென்னும் ஈர மேனியோடு காட்சி தரும் கன்னியழகியைப் போல கடற்கரைக் கோவில் காட்சியளித்தது.

அடடா! எவ்வளவு அழகான உருவ அமைப்பு! கட்டடக் கலைத் துறையில் எவ்வளவு கனிந்த கலையறிவு இருந்தால், இத்தகைய கோவில்களைப் படைத்திருக்க முடியும்! அழகைப் படைக்கும் நெஞ்சம் எவ்வளவு அழகுப் பிழம்பாக இருந்திருக்கும்! என வியந்தேன்.

உயர்ந்த கோபுரம் கடலை நோக்கியும், சற்றுத் தாழ்ந்த உயரமுடைய கோபுரம் மேற்குப் புறத்திலும் அமைத்திருக்கும் இணையில்லாத இணைக் கோபுர அமைப்பு என் உள்ளத்தின் அழகுக் கற்பனை யூற்றைப் பொங்கச் செய்தது.

கன்னிப் பெண்ணின் இரட்டை நெஞ்ச இயல்பை உருவகமாக இக் கோவில் காட்டுகிறதோ? அல்லது மக்களின் இருமனப் போக்கினை உருவகமாக வடித்தனரோ? என எண்ணியபடி மணல்மீது அமர்ந்தேன். கடற்கரைக் கோவிலைக் கண் கொட்டாமல் பார்க்கலானேன்.

காலந்தோறும் கலைப் பாட்டு மிழற்றும் அலைப் பெண்கள் ஆடிப் பாடிக் கூத்தாடிச் சிரித்து ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தனர்.

நீலவானில் கார்முகில் எப்போது வேண்டுமானாலும் அழக் காத்திருக்கும் குழந்தைபோலத் தவித்துக் கொண்டிருந்தது.

கோவிலின் முனைப் பகுதிகளிலெல்லாம் தண்ணீர் சொட்டிக் கொண்டிருந்தது. அந்தக் கடற்கரைக் கற்றளியின் மாடப்புரையில் இரு பசுங்கிளிகள் மழையால் சிலிர்த்துச் சீர் குன்றிய சிறகுகளோடு ஒடுங்கியிருந்தன.

கோவில்மீது கருங்கடற் காக்கைகள் இருந்ததைப் பன்முறை பார்த்திருக்கிறேன்; கோவில் மாடத்தில் புறாக்கள் வாழ்வதைக் கண்டின் புற்றிருக்கிறேன்; ஆனால் பச்சைப் பசுங் கிளிகள் ஒளிந்துறைவது அளிக்கும் மகிழ்ச்சி தனிச் சுவை வாய்ந்ததாக உணர்ந்தேன்.

ஒரு கிளி கீச்சிட்டது.

அவை பேசலாயின.

என் செவிகளைக் கூர்மையாக்கிக் கொண்டு ஒற்றனானேன்.

ஆண் கிளி:- கண்ணே, இந்தக் கற்றளி இல்லாவிடில், நாம் மழையில், குளிரில் விறைத்து உயிர் துறக்க நேரிட்டிருக்கு மல்லவா?

பெண் கிளி:- இயற்கை யன்னையின் கொடுமையால் நாம் இறப்பது மகிழ்ச்சிக்குரியது அத்தான் இந்த 'மக்களின்' கொடிய கைகளில் சிக்கி மடிவது எவ்வளவு விரும்பத்தகாதது!

ஆ. கி. :- உண்மைதான் அன்பே. அழகான கோவில்கள், கலைப் படைப்புகளைப் படைக்கும் அருள் அறிவு வாய்த்த மக்கள் கொடிய கொலையாவல்களைக் கொண்டிருப்பது சிறிதும் விரும்பத்தக்கதாயில்லை. முரண்பட்ட கலவையாக உயிரினங்களும் சில அமைந்துள்ளன. அவர்களை எவ்வாறு பாராட்டுவது என்றும் தெரியவில்லை! அன்பே, வானம் இனிய அழகிய மழையைப் பொழிந்து அருள் புரிவதைப் போலவே, காய்ந்து கொடுமை செய்து புல்லின் தலையைக் காணவும் இயலாதவாறு இரக்கமின்றி ஒழுகுகிறதே!

பெ. கி. :- இயற்கைத் தாயின் சிரிப்பும்—சீற்றமும் நமக்கு இனியது அத்தான். ஆனால், நம்மைப் போன்ற மக்கள் நம்மைப் போன்றுரிடம் கொடுமையாக நடக்கலாமா? அத்தான், இந்த இடத்திற்கு மக்கள் ஏன் இவ்வளவு கூட்டமாக வருகிறார்கள்?

ஆ. கி. ;- உனக்குத் தெரியாதா என்ன? பண்டைக் கால ஓவிய—கட்டடக் கலை வளம் இங்குத் தானே உள்ளது! மலையையும் கல்லையுங் குடைந்து பண்டைத் தமிழ்க் கலைஞர் படைத்த தமிழகக் கலைக் களஞ்சியம் அல்லவா இவ்வூரின் ஆக்கங்கள்!

பெ. கி. :- பல ஓவியங்கள் சீர் குலைந்திருக்கிறதே?...

ஆ. கி. :- சீரிய கலையாக்கம் சீர் குலைந்த போதும் மக்களைக் கவர்வதில் குறைவதில்லை. இதற்கு மாமல்லையே சான்று. பகைமை என்ற நஞ்சு பாய்ந்த நெஞ்சில் கொடுமை என்ற தீயே எரிந்து கொண்டிருக்கும். கலையையும் இயற்கையையும் கூட அந்த நச்சுத் தீ அழிக்க முனையும்.

பெ. கி. :- மக்கள் மாமல்லைக்குக் கலையார்வத்தால் வருகிறார்களா என்று ஐயப்பாடாக இருக்கிறது அத்தான். பலமுறை நான் பார்த்திருக்கிறேன்: இவர்கள் கற்றச்சுக் கலையழகைச் சுவைப்பதை விட கயமை புரிவதிலே மிகுந்த கருத்துடையவர்களா யிருக்கின்றனர்!

ஆ. கி. ;- உலகம் எப்படி எப்படியோ இருக்கும்! ஊரில் தாமரைப் பொய்கையும் இருக்கும்; சாக்கடையும் இருக்கும்!

பெ. கி. :- இருக்கும் என்பது உண்மை. ஆனால் திருமண வீட்டில் ஒப்பாரி பாடலாமா?

ஆ. கி. ;- சேச்சே! யார் அப்படிச் செய்வார்கள்?...ஓ!...

பெ. கி. ;- கலையும் இயற்கையும் கலந்து செழிக்கும் கடல்மல்லையினைக் கயமைக்கு நிலைக்களமாக்குவது பொறுத்துக் கொள்ள முடியாதது அத்தான்.

ஆ. கி. :- உண்மை. தூய அறிவற்ற பிறப்பு மக்கட் பிறப்பு. அவர்களுக்கு அறிவுரை கூறினாலும் ஏற்றுக் கொள்வார்களா?

பெ. கி: மழை விட்டிருக்கிறது, ஐங்கோவிற் பகுதிக்குப் போய் வருவோம்.

ஆ. கி: ஆகா. கண்ணே, ஐந்து கோவில்களின் உருவ அமைப்பும்,

(4-ஆம் பக்கம் பார்க்)



காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 13 அறுமாத சந்தா ரூ. 6-50

மலர் 8 | 9—1—72 | இதழ் 26

முஜிபுர் ரகுமான் விடுதலை?

இந்தக் கிழமை இறுதிக்குள் ஷேக் முஜிபுர் ரகுமான் நிபந்தனைகள் ஏதுமின்றி விடுதலை செய்யப்பட்டு விடுவார் என்று பாகிஸ்தான் ஜனாதிபதி புட்டோ அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்.

விடுதலை பெற்ற புதிய வங்கத்துக்கு மட்டுமின்றி, இந்தியத் துணைக்கண்டத்துக்கும், உலகப் பொது நலனில் அக்கறை கொண்டுள்ள பிற உலக நாடுகள் பலவற்றுக்கும் ஒரு மகிழ்ச்சிகரமான செய்திதான் இது என்பதில் எவருக்கும் சந்தேகம் இருக்க முடியாது.

செய்தியாளர்களைத் திரட்டி வைத்துக்கொண்டு, அவர்களிடம் ரகுமானின் விடுதலை பற்றி அறிவிப்புக் கொடுத்திருக்கிறார். அவ்வாறு இந்த அறிவிப்பைக் கொடுக்குமுன், முதல் நாள் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில், ரகுமான் விடுதலை செய்யப்பட வேண்டுமா? என்று மக்களைப் பார்த்து அவர் கேட்டதாகவும், கூடியிருந்த பல லட்சக்கணக்கான மக்கள் விடுதலை செய்துவிட வேண்டும் என்று உரத்துக் குரல் கொடுத்ததாகவும், எனவேதான் இந்த மக்களது குரலை மதித்து, ரகுமானை விடுதலை செய்யப் போவதாகவும் அவர் விளக்க மளித்திருக்கிறார்.

எனவே, இந்த விடுதலை அறிவிப்பிலிருந்து நாம் ஒன்றை யூகிக்க முடிகிறது. முஜிபுர் ரகுமான் சிறை வைக்கப்பட்டிருப்பதை, தொடக்கத்திலிருந்தே பாகிஸ்தான் மக்களில் பெரும்பாலோர் விரும்பவில்லை என்றும், அந்த பெரும்பான்மை மக்களது விருப்பத்துக்கு மாறாகத்தான், ரகுமான் சிறை வைக்கப்பட்டிருந்தார் என்பதையும் உணர முடிகிறது.

மக்கள் விருப்பமறிந்து அவரை விடுதலை செய்துவிட முடிவெடுத்து விட்டதாக அறிவிப்புக் கொடுத்துவிட்டு, தாம் மற்றுமொரு முறை அவரைச் சந்திக்க வேண்டியிருக்கிறதென்றும், அதுவரையில் அவர் விடுவிக்கப்பட மாட்டார் என்றும், அந்த வாய்ப்பு இந்த வெள்ளிக்கிழமை வரையில் ஏற்படாதெனவும், அதற்குப் பிறகே அவரைச் சந்திக்க முடியும் எனவும், சந்தித்துப் பேச்சு வார்த்தைகள் நடத்திய பிறகே விடுவிக்கப்படுவார் எனவும் பேசி இருக்கிறார்.

இந்தப் பேச்சு மூலம், அவர் உண்மையிலேயே ரகுமானை விடுதலை செய்துவிட வேண்டும் என்றுதான் நினைக்கிறாரா என்பதில் சந்தேகம் எழச் செய்கிறது.

இதுவரையில் மூன்றுமுறை சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தி, ரகுமானைத் தம்வழிக்குத் திருப்ப அவர் மேற்கொண்ட முயற்சிகள் பலிதமாகவில்லை என்ற நிலைமைக்குப் பிறகும், மக்கள், அவரை விடுதலை செய்துவிட வேண்டும் என்று வேட்கை வெளியிட்ட பின்னரும் கூட, இன்னோர்முறை சந்தித்துப் பேச அவர் விரும்புகிறார் என்பதில், அந்தப் பேச்சு வார்த்தையில் புட்டோ விரும்புகிற பலன் கிடைக்காமல் போனால், அவர் விடுதலை செய்யப்பட மாட்டார் என்ற மறைமுகப் பொருளும் தொக்கி இருக்கிறது.

அல்லாமல், பேச்சுக்கள் திருப்திகரமாக அமைந்தாலும், அமையாது போனாலும், அவர் விடுதலை செய்யப்படுவது உறுதி என்று கூறப்பட்டால், விடுதலை முடிவை மேற்கொண்டு விட்ட பின்பு, அதற்கென காலகெடு நிர்ணயித்துக்கொண்டு காலங் கடத்துவது பைத்தியக்காரத்தனமான ஒரு நடவடிக்கையே யாகும்.

முஜிபுர் ரகுமானுடன் மற்றுமொரு முறை பேச்சு வார்த்தை நடத்தித்தான் தீரவேண்டும் என்று புட்டோ விரும்புவாரானால், அந்த விழைவை அவர், ரகுமானைக் கைதியாக வைத்துத்தான் நிறைவேற்றிக் கொள்ளவேண்டும் என்பதில்லை.

வங்க அரசே அறிவித்திருக்கிறபடி, வங்கத்தின் ஜனாதிபதி என்ற பெருமதிப்புக் குரிய அவரை விடுதலை செய்து, உரிய மதிப்புடன் அவரைச் சந்தித்துப் பேச விரும்பி இருக்கலாம். அதுவே, உலக நாடுகளில், தன் மதிப்பை உயர்த்திக்கொள்ள புட்டோவுக்குக் கிடைத்த ஒரு அரிய வாய்ப்பாகவும் அமைந்திருக்கக்கூடும்.

சரியான நடவடிக்கைகளை, சரியான முறையில், சரியான நேரத்தில் எடுத்துச் செயல்படுவதில் தனக்கு என்றுமே அக்கறை இருந்ததில்லை என்பதிலே வரலாறு படைத்துக் கொண்டுள்ள புட்டோ, இப்போது மட்டும் அதற்கு விதிவிலக்காக இருப்பார் என்று எதிர்பார்க்க முடியாதுதான்!

எனவே, ஒரே நேரத்தில் உலக நாடுகளையும் ஏய்க்கிறார்; தன் நாட்டு மக்களையும் ஏய்க்கிறார் என்றுதான் பொருள் கொள்ள முடியும்.

இந்த இதழ், வாசகர்களது கரத்தில் கிடைக்கும் முன்பு, முஜிபுர் ரகுமான் அநேகமாக விடுதலை செய்யப்பட்டிருந்தால், அதற்குக் காரணம் புட்டோவுக்கு ஏற்பட்ட ஒரு அரசியல் நெருக்கடியாகத்தான் இருக்கவேண்டும் என்பதைத் தவிர வேறெதுவும் பொருளாக இருக்க முடியாது. எனினும், எந்தவகையில் அவர் விடுதலை செய்யப்பட்டாலும், மகிழ்ச்சியுடன் பாராட்டியே ஆகவேண்டும். ஃ

விஞ்ஞான மேதையின் மறைவு

சென்ற திங்கள் 30-ஆம் நாளன்று அதிகாலை, இந்திய அணுசக்திக் கமிஷன், மற்றும் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றின் தலைவரான விக்ரம் சாராபாய், மாரடைப்பால் காலமடைந்த செய்தி கேட்டு, விஞ்ஞான உலகம், தன் ஆழ்ந்த கவலையைப் புலப்படுத்திக் காட்டி இருக்கிறது.

சில ஆண்டுகளுக்கு முன்பு, இதே பதவியிலிருந்த ஹோமி பாபா, விமான விபத்தில் காலமானதன், அந்த இழப்பைச் சரியான அளவுக்கு ஈடுகட்டும் நோக்கத்தில்தான் சாராபாய், அணுசக்திக் கமிஷனின் தலைவராக நியமிக்கப் பெற்றார்.

இந்தியத் துணைக்கண்டம், விஞ்ஞானத் துறையில் இன்னும் எவ்வளவோ முன்னேற வேண்டியிருக்கிறது. என்றாலும் அந்தத் துறையின் பெரும் மேதைகளை எல்லாம் ஒவ்வொருவராக இழக்கவேண்டியிருப்பது துணைக்கண்டத்தின் சாபத்தீடாக இருப்பது கவலைதரக் கூடியதேயாகும்.

திரு. சாராபாய், தமது துறையில் மிகுந்த ஞானம் பெற்றிருந்தவர். கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் நிபுணத்துவம் பெற்றுக்கொண்டு, புகழ் பெற்ற விஞ்ஞான மேதையாம் சி. வி. ராமனிடம் ஐந்தாண்டுக் காலத்துக்கு மேலாகப் பணியாற்றி அனைத்துத் தகுதிகளையும் வளர்த்துக் கொண்டு,

(15-ஆம் பக்கம் பார்க்க)

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கலையழகும், கற்பனை நயமும் எவ்வளவு சிறந்தது தெரியுமா?

பெ. கி: ஆம் அன்பே. நிலவு ஒளியிலும் காலைக்கதிரொளியிலும் அந்தக் கவின் கலைக்கோவில்களை—மாயக்கனவின் மகிழ்ச்சிச் செல்வங்களை—நாம் சுவைத்துச் சுவைத்து மெய்ம்மறந்திருக்கிறோமே!

ஆ. கி: கல்லில் கலையாகி விளங்கும் உருவங்களில் எவ்வாறு அந்த ஓவிய அழகு ஒளியூற்றாய்ப் பொலிகிறதோ! இலக்கணக் கட்டுக்கோப்போடு இலங்கும் கற்றச்சுக் கலை மாட்சியே தனித் தன்மை வாய்ந்தது.

பெ. கி: ஆம் புறப்படுங்கள்!

இரு பைங்கிளிகளும் கீச்சிட்டவாறு சுறுசுறுப்பாகப் பறந்தோடின.

எனக்குள் மகிழ்ச்சியலை கூத்தாடியது. மக்களைக் கிளிகள் எப்படித் திறனாய்வு செய்கின்றன என்று எண்ணி வியந்தேன். பறந்து செல்லும் கிள்ளைகள் கண்ணுக்கு மறையும் வரை நோக்கினேன். தொலைவானத்தில் அவை சின்னஞ்சிறு புள்ளிகளாகத் தோன்றி, இறுதியில் முற்றும் புலப்படாதபடி மறைந்தன, அவை அமர்ந்திருந்த மாடத்தைப் பார்த்தேன், வெறிச்சென்றிருந்தது.

பெற்ற மக்கள் எல்லாரும் வெளியூர்களில் பணியாற்றச் சென்றுவிடத் தன்னந் தனியாகத் தாய் மட்டும் சொந்த வீட்டில் யாருமில்லாமல் இருந்து, வெறிச்சோடிக் கிடக்கும் வீட்டுச் சூழ்நிலையை ஏக்கத்தோடு நோக்கித் தாய் நெஞ்சம் தவிப்பதுபோல என்னெஞ்சம் சிதைந்தது!

கிளிகள் போய்விட்டு ஏங்கிய அவ்விடத்தில் இரு காக்கைகள் வந்தமர்ந்தன. அதைக் கண்டதும் எனக்குச் சிரிப்பெழுந்தது; எரிச்சலுணர்ச்சியும் உண்டானது. தகுதியுள்ளவர் ஆண்ட அரசில் தகாதவர் ஆளவந்து அல்லலுறுவது போன்றிருந்தது அக்காட்சி.

"கா...கா...கர்ர்...கர்ர்..."

—காக்கைகள் கூச்சலிட்டன. ஒரு நாய் ஓடிவந்து என்னைச் சுற்றி ஏக்கத்தோடு நோக்கிவிட்டு உணவு எதுவும் கிடைக்காதென அறிந்து தொலைவில் ஓடலாயிற்று. சுற்றுலா வண்டிகளும், இன்ப ஊர்திகளும், வந்து நின்றன. ஆண்கள், கட்டழகிகள், நாகரிகியர், மாணாக்கர், அலுவலர் ஆகியோரும் பிறமொழியினர், பிற நாட்டினர் ஆகியோரும் வந்தனர். மேம்போக்கான பார்வை, ஆரவாரப் போக்கு, குள்ளச் சிரிப்பு, குறுகுறுப்பான நோக்கு, துள்ளல் நடை, துடுக்குப் பேச்சு, ஆர்க்குஞ் சிரிப்பு, ஆளை விழுங்குந் தன்மை......ஆகிய பல் வகைப் பான்மைகளோடு அங்கங்கு நின்றும், சென்றும் பார்த்தனர். வழிகாட்டிகள் தமக்கே உரிய முடம்பட்ட ஆங்கிலத்திலும், ஒட்டைத் தெலுங்கிலும், மருட்டும் இந்தியிலும், கொச்சைத் தமிழும் கலந்து வரலாற்றுச் செய்தி, புராணச் செய்தி, பொய்ச் செய்தி, போலிச் செய்தியாகிய 'சுண்டல்களை' அள்ளி வழங்கிக் கொண்டிருந்தனர்.

மாசும் மப்பும் பரந்த வானத்தின் தாய்மைத் தன்மையும், தண்மையும் என் நெஞ்சைத் தழுவியமைதி யளித்தன. பிதிர் பிதிராகப் பன்னீர் தெளிப்பது போலப் போடும் மழைத்தூரல் எனக்கு மகிழ்வளித்தது. பசுமையும் கருநீலமும் கலந்த முத்தலை புரளும் கத்துங்கடலழகு கவின் இலக்கியமாக விரிந்திருந்தது. பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத பண்பழகு மின்னுங்கடலில் என் வாழ்வின்பம் பொங்குவதுபோலத் தோன்றியது. குழந்தையின் தூய பார்வையின் எழில் போலக் கடற்கரைக் கோவில் என்னைப் பார்ப்பதாகத் தெரிந்தது. அதை நோக்கிக் காதற் புன்னகை பூத்தேன். என் கண்கள் கிறங்கின. மனத்தின் மதர்ப்பிலே மகிழ்ச்சி வெறியின் பசிக்கூர்மை மின்வெட்டாகத் தாக்கியது.

மீண்டும் பார்த்தேன்.

ஆ!

எங்கே கடற்கரைக் கோவில்?

காணவில்லை!

ஓ!

அது என்ன?

ஓர் மின்னல் ஒளிப் பிழம்பு விண்ணில் தொங்கும் ஒளிப் பூமாலை கதிர் சிந்துவதாகத் தோன்றுகிறதே! பூப்பூவாய்ச் சொரியும் வண்ணப்பூ மின்னலில் உரைக்கவியலா ஓவிய அழகுடன் கீழிறங்கும் உருவம் யாருடையதோ?

பொன் வடிந்தொழுகுகிறதோ? பூவின் வண்ண ஓடையோ? புலமைக் கற்பனையின் புன்னகையருவியா?, புதுமையின் மாயத் திருவுருவோ?

அது! ஒரு பொன்னோவியப் படிவம்!

இல்லை.

பெண்ணின் இன்பம் துளும்பும் வண்ண எழிற் படைப்பு! இல்லை; இல்லை.

கடைந்தெடுக்காது தானே கனிந்த கன்னிமைக் கனியின் கவின்தானோ?

என்ன பேரழகு! எத்தனைப் புத்தம் புதுமை!

அவள் யார்?

வியப்பாலும் அதிர்ச்சியாலும் விளங்காமையாலும் வாய்பிளந்தவாறே எழுந்தேன். கண்கொட்டாமல் அக்கட்டழகுக் கவின் ஓவியக் கன்னியை நோக்கினேன். அவள் பார்வையின் ஆற்றல் என்னைப் பித்துறச் செய்தது. பேதுற்றாலும் இப்பேரழகுப் பெண்ணின் அடியில் பேதுற வேண்டும்! அவள் அடியில் எப்போது முடி சாய்ப்போம் என்று தவித்தேன்.

நெருங்கினேன்.

பகல் ஓடிவிட்டது.

வான் இருண்டது. வண்ணநிலவு எழு வண்ண வானவில் போலக் கிழக்கில் பல வண்ண ஒளிவீசியெழுந்தது. கடலோ! அம்மாவோ எத்தனை வண்ணக் கோலம்! வானவில்லே கடலாகி விட்டதோ? பொன் வண்ண ஒளி மின்னச் செந்தாமரை நிறத்துக் கன்னி நோக்கிச் சிரித்தாள். உயிரின் சிரிப்பு அது! உணர்வின் தாய்மையது! அழகின் ஊர்வலம் அது!

வான் வெளிக்கு அப்பாலிருந்து ஒரு மறை செய்தி வந்து இறங்கியதோ? கனவுகள் பிறக்குமிடத்தின் திருவிழாவோ? யாழிசையின் கற்பனை வாழ்வைச் சுவை பார்க்க எடுத்ததொரு மென்மை வடிவமோ?......

"ஐயா!"...

பொன் நரம்பு மீட்டி அப்பெண் யாழ் பிலிற்றிய இசையோ அவ்வழைப்பு? பூங் குரலில் ஒளிப் பொன்மை யிழைந்ததோ? அழகிலே அருள் பழுத்ததோ? அறி

(14-ஆம் பக்கம் பார்க்க)

சோழமாதேவி

ராஜிமணுளன்

[39]

சோழ அரசில் சோகப் புயல்!

என்னென்னவோ கற்பனைகளில் மூழ்கி, கனவுலகில் நீந்திக்கொண்டே, விடுதியின் வாயில் முகப்பிலேயே பார்வையைப் பதித்துக்கொண்டு, கமுகு மரத்தில் சாய்ந்து கொண்டிருந்த விகாரதேவி, எதிர்பாராமல் இரண்டு கரங்களால் கோர்த்து அணைக்கப்பட்டதும், ஆ என்று அலறிவிட்டாள். அடுத்து அவள் மேலும் கூச்சல் கிளப்புவதற்கு முன்பு, மரத்தின் மறைவிலிருந்த வீரபாகு, எதிரே வந்து நின்று, அவளது வாயை அழுந்தப் பொத்திக்கொண்டான்.

மங்கிய நிலவொளியில், முதன் முதலாக இருவரும் அப்போதுதான் பார்த்துக் கொண்டனர். தன்னைக் கோர்த்து அணைத்தது வீரபாகுதான் என்பதும் அப்போதுதான் விகாரதேவிக்குப் புரிந்தது. அதுபோலவே, தான் அணைத்தது விகாரதேவியைத்தான் என்பது வீரபாகுவுக்கும் புரிந்தது.

நள்ளிரவு நேரத்தில் விடுதிக் கிழவியை எழுப்பி, கதவைத் தாளிட்டுக் கொள்ளும்படிக் கூறிவிட்டு, ரோகணத் தலைநகரை ஒரு சுற்றுச் சுற்றிவர நினைத்து வெளியே போய்விட்டு, அப்போதுதான் திரும்பிக் கொண்டிருந்த வீரபாகு, விடுதியின் எதிரே, எழிற் கோலம் பூண்ட பெண்ணொருத்தி மரத்தில் சாய்ந்து கொண்டிருந்தது கண்டு, சரியான நேரத்தில் சரியான விருந்து என்று எண்ணிக்கொண்டு, பலவந்தம் செய்யும் தன்மையில் மரத்துக்குப் பின்புறம் வந்து அவளைக் கோர்த்துக் கட்டிக்கொண்டபோது, அவள் விகாரதேவியாக இருக்கக்கூடும் என்று கற்பனைகூட செய்து பார்க்கவில்லை. எனவே ஒருகணம் அதிர்ச்சியடைந்துவிட்டான். ஆனால் அவனுக்காகவே வந்து, காத்திருந்து ஏமாந்து போய் நின்றுகொண்டிருந்த விகாரதேவிக்கு, அவனைக் கண்டதும் மகிழ்ச்சி பிடிபடவில்லை!

விகாரதேவி எதுவும் பேசத் தொடங்குமுன், பரபரவென்று அவளது கரங்களைப் பிடித்து இழுத்துக்கொண்டு, விடுதியின் பின்னால் உள்ள குதிரை லாயத்துக்குப் போனான் வீரபாகு! இழுத்துச் செல்லப்படும் ஒரு நாய்க்குட்டிபோல அவனைத் தொடர்ந்தாள் விகாரதேவி! அவளது இதயத்தில் ஏதேதோ இன்ப உணர்வுகள் குதியாட்டம் போடத் தொடங்கி விட்டன!

குதிரை லாயத்துக்கு வந்து சேர்ந்ததும் முதலாக விகாரதேவி, "உங்களை நான் இப்போது சந்திக்க முடியும் என்று நினைக்கவே இல்லை" என்றாள் மெல்லிய குரலில். "நான் கூடத்தான் ரோகணாவின் அரசியார் அவர்களை எதிர்பார்க்கவில்லை—இங்கே, இந்தக் கோலத்தில்!" என்றான் வீரபாகு. அவனது பேச்சில் கேலி தொனித்தது. ஆனால் அவனது உள்மனத்தில், சென்ற ஆண்டு இதே விகாரதேவி, தன் காதலுக்காக வந்து காத்திருந்ததும், சந்திக்கவேகூட முடியாதென்று மறுத்துவிட்டதும் நிழலாடின. அதே வேளையில், இந்த நடுத்தர வயதுப் பெண்ணின் காதலுக்காகத் தான் மகாகாமா அரண்மனைக்குவந்து பல நாட்கள் தங்கி இருந்ததும், அது நிறைவேறாமல் போனதும் நினைவுக்கு வந்தன.

ஒருவர்மீது ஒருவர் காதல் கொண்டிருக்கிறோமா? இதற்குப் பெயர் காதலா? காமமா? எதுவாகவும் இருந்துவிட்டுப் போகட்டும். நான் விரும்புகிற நேரத்தில் அவள் மறுத்து வந்திருக்கிறாள். அவள் விரும்புகிற நேரத்தில் நான் மறுத்து வந்திருக்கிறேன். ஆனால் இப்போது?...வீரபாகு இதுபோல சிந்தித்துக்கொண்டு நின்றுகொண்டிருந்தான். ஆனால் விகாரதேவியினால் அமைதியாக நின்றுகொண்டிருக்க முடியவில்லை. "அன்பரே" இனிமேலும் என்னால் காத்துக்கொண்டிருக்க முடியாது!" என்று சொல்லிக் கொண்டே வீரபாகுவின் கழுத்தைக் கோர்த்துப் பிடித்து வளைத்துக் கொண்டாள்.

இதமான ஒரு சுகானுபவமாக இருந்தது வீரபாகுவுக்கு. இந்த அனுபவத்தை இலங்கைத் தீவில், எத்தனையோ முறை இலங்கையின் சொந்தக்காரர்களிடமிருந்து அவன் பெற்றிருக்கிறான். என்றாலும் இப்போது அந்த அனுபவம் இதயத்துக்கு இன்பமாக இருந்தது!

விகாரதேவியைத் தூக்கி அணைத்துக்கொண்டு, இறுகிய பிடி, தளராமலேயே அப்படியே அங்கே அமர்ந்து கொண்டான். அந்த நிலையில் விகாரதேவி, அவன் மடிமீது படுத்துக் கொண்டிருந்தாள். ஏறக்குறைய அவள் தன் நிலை முழுவதையும் மறந்து போய்விட்டாள். எதிர்பார்த்து ஏங்கிக்கொண்டிருந்த இன்பம் கிடைத்துவிட்ட மனநிறைவு அவளுக்கு.

அவன் ஏதோ பேச முயன்றான். அவளும்தான்! ஆனால் யாருமே சொற்களை உகுக்கவில்லை. கிழக்கு வெளுக்கத் தொடங்கிவிட்டது என்பது இருவருக்

"சோழமாதேவி" தொடர்கதை அடுத்து வரும் பொங்கல் மலரில் முற்றுப் பெறும் என்பதை அறிவித்துக்கொள்கிறோம்.

— ஆசிரியர்.

குமே புரிந்தது. எஞ்சிய இரவு வீணாகிவிடக்கூடாதே என்ற கவலை விகாரதேவிக்கு! மடியில் கிடந்தபடியே, வீரபாகுவை வளைத்துச் சாய்த்துத் தன்மீது போட்டுக்கொண்டாள். அவ்வளவுதான்! உலகை மறந்து விட்டார்கள் இருவரும். இருவரது நெடுநாளைய எண்ணங்களும் அந்தக் குறுகிய நேரத்துக்குள் ஈடேறி விட்டன. மயங்கிச் சாய்ந்து கிடந்தாள் விகாரதேவி! மடிமாறிப் போயிருந்தது. இப்போது ரோகண அரசியின் மடிமீது ராஜரடாவைச் சேர்ந்த விஜிதபுரக் கோட்டையின் தலைவன் மயங்கிக் கிடந்தான்.

கிழக்கு வெளுக்க வெளுக்க, இருவரது மயக்கமும் தெளிந்து கொண்டிருந்தது. முழு அளவுக்குத் தெளிவடைந்த விகாரதேவி, எழுந்தமர்ந்து வீரபாகுவின் மார்பில் சாய்ந்தபடியே "அன்பரே! நீங்கள் எனக்கு ஒரு வாக்குறுதி தரவேண்டும்!" என்றாள். "என் அன்பரசி எது கேட்டாலும் தருவேனே!" என்றான் வீரபாகு. "ராஜரடாவுக்கும் ரோகணரடாவுக்கும் போர் என்று ஒன்று ஏற்பட்டால், அதிலே நீங்கள் எந்தப் பக்கமும் சேரக்கூடாது!" என்றாள் விகாரதேவி.

பேயறைந்தது போல இருந்தது வீரபாகுவுக்கு. கொடுக்கக் கூடாததைக் கொடுத்து, கேட்கக்கூடாததை அல்லவா கேட்டுவிட்டாள் அந்தப் பெண் பேதை!

சாய்ந்துகிடந்த அரசியைத் தூர உதறிவிட்டு, எழுந்து நின்றான் வீரபாகு. "நான் என் நாட்டுக்குத் துரோகம் செய்யவேண்டும் என்பதற்காகத்தானா இந்த நாடகம் ஆடினாய் நீ?" என்று அவளது இரு தோள்பட்டைகளையும் பிடித்து ஒரு உலுக்கு உலுக்கினான். பதறிப்போய் விட்டாள் விகாரதேவி! அந்த உலுக்கில், அவள் அதுவரையில் அனுபவித்த அனைத்து இன்பங்களுமே உதிர்ந்துபோய்விட்டன! என்றாலும், "கண்ணாளா! நன்றாக யோசித்துப் பதில் சொல்லுங்கள்! உங்கள் விடையை, நான் மறுபடியும் உங்கள் கோட்டைக்கே வந்து பெற்றுக்கொள்கிறேன்!" என்று கூறிவிட்டு பதிலையும் எதிர்பாராமல் விர்ரென்று அரண்மனையை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

அவள் போவதையே பார்த்துக்கொண்டு நின்று கொண்டிருந்த வீரபாகுவை, இரவு முழுவதும் விழித்துக்கொண்டிருந்ததால் ஏற்பட்ட களைப்பு மெள்ளப் பற்றத் தொடங்கியது. மெதுவாக விடுதியின் முன் பக்கம் வந்து, வாயிலை அடைந்தான்! வாயில் கதவு திறக்கப்பட்டிருந்தது. அவனுக்கு ஆச்சர்யத்தை அளித்தது. விடுதிக் கிழவி, எழுந்து வெளியே போயிருக்கலாம் என்று எண்ணிக்கொண்டு உள்ளே நுழைந்தான்.

தேவியார் அவர்கள் விழித்து விட்டார்களா! என்பதைக் கண்டறியும் நோக்கத்தோடு, சோழ தேவி படுத்திருந்த அறையின் பக்கம் எட்டிப் பார்த்தான்! பற்றிக்கொண்ட பேரதிர்ச்சி அவன் உடலை நடுங்கச் செய்துவிட்டது.

சோழ தேவி, படுக்கையிலிருந்து உருண்டு, அலங்கோலமாகக் கீழே விழுந்துகிடந்தார். அவர் கிடந்த அந்த தோற்றம், அவருக்கு உயிர் இருக்கிறதா என்ற சந்தேகத்தை ஏற்படுத்திவிட்டது வீரபாகுவுக்கு. எதைப் பற்றியுமே சிந்திக்காமல், அறைக்குள் நுழைந்து, தேவியாரின் ஆடைகளைச் சரிசெய்துவிட்டு, மூச்சு இருக்கிறதா என்று சோதனை செய்து பார்த்தான்! சோழ அரசி தியாகவல்லி தேவியின் மூச்சு நின்றுவிட்டிருந்தது! ஆமாம், சோழ தேவி, தன் இன்னுயிரை நீத்து, அமைதியாகத் துயிலத் தொடங்கிவிட்டார்.

மயிர் நீத்தால் உயிர் நீக்கும் மான் மான மரபில் வந்த அந்த அரசியார், தன்மீது மாசுரைக்கப்பட்டிருந்த கொடுமைபற்றி, இரவு விடுதிக் கிழவியினால் கேள்விப்பட்டு, இதயம் நைந்து, கதறி அழுது, அந்த வினாடியிலேயே மார்படைத்து மாண்டுபோய் விட்டார் என்பது வீரபாகுவுக்குத் தெரியாது; தெரிந்துகொள்ளவும் வழியில்லை.

கோட்டைத் தலைவன் தலை சுற்றியது. என்றாலும் உடலில் காயங்கள் ஏதேனும் இருக்கிறதா? உடையில் இரத்தக் கசிவுகள் காணப்படுகின்றதா என்பதைக் கவனித்துவிட்டு, தேவியார் கொலை செய்யப்பட்டுவிட்டிருக்க முடியாது என்பதை யூகித்துக் கொண்டான்!

இந்த மரணத்துக்கும், அந்த இரவில், அந்த விடுதிக்கு விகாரதேவியின் வருகைக்கும் தொடர்பிருக்கக்கூடுமோ என்று எண்ணிப் பார்த்தான். எதுவுமே புரியவில்லை அவனுக்கு. தேவியின் சடலத்தை இனியும் அங்கே விட்டுவைப்பது நல்லதல்ல என்று நினைத்து, வாயிலுக்கு வந்து, உறங்கிக்கொண்டிருந்த தேரோட்டியை எழுப்பி, அவனது உதவியினால் தேவியைத் தூக்கிக்கொண்டுவந்து தேரில்



கிடத்திவிட்டு, துரிதமாகப் போகும்படி உத்தரவிட்டான் வீரபாகு.

தேரோட்டிக்கு எதுவும் புரியவில்லை. தேவிக்கு என்ன நேர்ந்தது? உடம்புக்கு என்ன? ஏன் மூர்ச்சித்துக் கிடக்கவேண்டும் என்று எண்ணிக்கொண்டே, தேரில் குதிரைகளைப் பூட்டிக்கொண்டு, பறக்கத் தொடங்கினான்.

ஃ ஃ ஃ

இரத்தினாவின் அறைகூவலை மறக்கமுடியவில்லை நந்தி மித்திரனால், சோழ அரண்மனைக்கே வந்து தன்னைச் சிறையெடுத்துச் செல்லும்படிக் கூறிவிட்ட ஆணவத்தை மன்னிக்கவும் முடியாது—மறக்கவும் முடியாது. செய்து காட்டுகிறேன்! சிறையெடுத்து வந்து, அவளது சிந்தைக்கு எனது வீரத்தை விளக்கிக் காட்டுகிறேன் என்று தனக்குள் சொல்லிக்கொண்ட நந்தி மித்திரன், தனது ஓய்வு விடுதியை விட்டு, குதிரை ஒன்றின்மீது ஏறி புறப்பட்டுவிட்டான் அனுராதபுரத்தை நோக்கி.

ஃ ஃ ஃ

அதேநாள் மலையநாட்டுக்கு ஓடிப்போய்விட்ட கமணனை, தேடிப் பிடித்து அழைத்துக்கொண்டு, மகாகாமா அரண்மனைக்கு வந்து சேர்ந்தான் தளபதி சூர நிமிலன்.

கமணன் வந்துவிட்ட செய்தியறிந்து அவனது தாயும் ஓடிவந்து அவனைக் கட்டிப் பிடித்து அணைத்துக் கொண்டாள்.

இரவெல்லாம் விழித்திருந்ததால் ஏற்பட்ட களைப்புக்கூட தெரியவில்லை, தனக்கு வாக்குறுதி தர மறுத்துவிட்ட வீரபாகுவை, எப்படியும் மறுபடியும் சந்தித்து வாக்குறுதியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற ஒரு நம்பிக்கை அவளது இதயத்தின் ஒரு மூலையில் உறங்கிக் கொண்டிருந்தது. எனவே, கமணனிடம், "மகனே! இன்று ஓய்வெடுத்துக்கொள்! நாளைக்கே ராஜரடாவின் மீது போர்ப் பிரகடனம் செய்துவிடு! மறுநாள் நம் படைகள் அனுராதபுரத்தின்மீது பாயட்டும்!" என்று கட்டளைகளை உகுத்துவிட்டாள்.

கமணன் அரண்மனை புகுந்ததுமே, நந்தி மித்திரனை அழைத்துவரும்படி ஆள்அனுப்பி இருந்தான். அவன் அப்போதுதான் திரும்பி வந்து, "நந்தி மித்திரன் ராஜரடாவுக்குச் சென்றிருக்கிறாராம்!" என்ற தகவலைத் தந்தான்.

தாயின் கட்டளைகளைச் செவிமடுத்த கமணன், காவலன் கூறியவைகளையும் கேட்டுவிட்டு தாயைப் பார்த்து, "நந்தி திரும்பிவரும் வரையில் காத்திருக்கலாமல்லவா தாயே!" என்றான்.

"நந்தி ராஜ ரடாவுக்குத் தானே போயிருக்கிறான்! நம் படையெடுப்புச் செய்தியை அவனுக்கு அனுப்பிவிடு! நீ மேற்கொண்டு நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்! முதலமைச்சரைக் கலந்து நடவடிக்கைகளுக்கு முடிவு எடு" என்று கூறிவிட்டுப் போய்விட்டாள் விகார தேவி.

ரோகண அரசி, அங்கிருந்து அகன்றதும், தளபதி சூரநிமிலன், "தங்கள் அன்னையார் கூறுவதுதான் சரி

வண்ணமிகு படைப்புகள்
வர்ணமய உலகம்
அதுவே கோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம்
பட்டுகள் பிரமாதம்
நெசவோ நெஞ்சையள்ளும்
குர்தாக்கள்
பெல் பாட்டம்கள்
லுங்கிகள்
சேலைகள்
உங்கள் உள்ளம் ஏங்கும் சிருஷ்டிகள்

கோ-ஆப்டெக்ஸ் படைப்புகள்

கோ-ஆப்டெக்ஸ்

காலப்போக்கிற்கு ஏற்ற
வர்ணஜால ஆடைகள்...

கோ-ஆப்டெக்ஸ்
சகாயமான விலை...

ஆதாயமான உழைப்பு

தமிழ்நாடு
கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம் லிட்.

பாலசுந்தரம் பில்டிங்ஸ்
எழும்பூர் : சென்னை-8

"துக்ளக்"கின் அழுகைக்கு "குமுதம்" இதழின் பதில்!

பாதுகாப்பு நிதிச் சுவரொட்டிகளைப் பற்றியும், விளம்பரங்களைப் பற்றியும் சிலர் முணுமுணுப்பது காதில் விழும்போது, சின்ன விஷயங்களைப் பெரிது படுத்துவது சரியில்லை, தேவையில்லை — அதனால் அபாயமும் உண்டு என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

மீண்டும் யுத்தம் எப்போது வேண்டுமானாலும் வெடிக்கலாம் என்ற நிலையில், தேசப்பாதுகாப்பைக் காட்டிலும் சிறப்பான ஒருபணி என்ன இருக்கமுடியும்? நாட்டுக்காக உயிரைக்கொடுக்க முடியாவிட்டாலும், ரத்தத்தைக் கொடுக்க முடியாவிட்டாலும், தங்களாலான தொகையை வழங்க அனைவருக்கும் பாதுகாப்பில் பங்கு பெறக்கூடிய வாய்ப்பைத் தேசிய பாதுகாப்பு நிதி அளிக்கிறது என்று சொல்லவும் வேண்டுமா!

பத்துக் கோடி என்று ஒரு குறியை நியமித்து அதை நோக்கி முன்னேறும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருக்கும் முதல்வருக்குக் கைகொடுக்க வேண்டுமேயல்லாது, அதன் பொருட்டு ஒட்டப்படும் சுவரொட்டிகளையும் பத்திரிகை விளம்பரங்களையும் பார்த்துச் சிலர் குறை சொல்லிக்கொண்டிருப்பது முறையாகத் தோன்றவில்லை.

ஜனாதிபதி நிக்ஸனையே பின்னுக்குத் தள்ளிவிட்டார் திருமதி இந்திராகாந்தி. அவரைச் சுவரொட்டி ஓவியர்கள் பின்னுக்குத் தள்ளியதை எண்ணி வருந்தவேண்டுமா?

தமிழகத் தலைவரும் தேசத் தலைவரும் இணைந்து செயல்படுவதாகக் காட்டவேண்டும் என்ற நோக்கத்தில்தானே போட்டிருக்கிறார்கள்? அதில் என்ன தவறு இருக்கமுடியும்?

நிதி திரட்டுவதில் கருணாநிதிக்கு நிகர் கருணாநிதிதான் என்பது எல்லோரும் அறிந்த விஷயம்,

வெறும் வாய் வார்த்தைக்கான நேரம் கடந்து காரியத்தில் இறங்குகிற கட்டம் வந்தவுடன் முதலமைச்சர் முழு மூச்சுடன் இறங்கியிருக்கும் உற்சாகம் குறிப்பிடத் தகுந்தது.

பிச்சைக்காரர்களுக்காக ஒரு கோடி திரட்டியவர் அவர். பாரத நாட்டின் பாதுகாப்புக்காகப் பத்து கோடி திரட்டுவதா கடினம்?

அவருடைய தேசப்பற்றைப் பாராட்டி அவருடைய முயற்சி அமோக வெற்றியடைய, நாம் கை கொடுப்பதுதான் நியாயம். சில்லரை விஷயங்களைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருப்பது சரியாகாது.

'நிர்வாகி, தேசிய பாதுகாப்பு நிதி, எழிலகம், சென்னை' என்ற முகவரிக்கோ, மாவட்டக் கலெக்டர்களுக்கோ பணம் அனுப்பவேண்டும்.

("குமுதம்" தலையங்கம் 6-1-'72)

இளவரசே! நாம் உடனே போர்ப் பிரகடனம் செய்துவிடுவதுதான் நல்லது!'' என்றான். ''அப்படித்தான் நானும் நினைக்கிறேன்—அதுதான் சரியான முடிவு'' என்று கூறிக்கொண்டே அங்கு வந்து சேர்ந்தார் காசியபர்.

மூவரும் கலந்து, பற்பல முடிவுகளை மேற்கொண்டு, தூதன் ஒருவன் மூலம் போர் தொடுக்கப் போவதற்கான அறிவிப்பை, அனுராதபுரத்துக்கு அனுப்பிவைத்தான் கமணன்.

* * *

இரண்டாம் நாள் மாலை. சோழ அரசியின் சடலத்தைச் சுமந்து கொண்டு வந்த தேர், அனுராதபுரம் அரண்மனை வாயிலை அடைந்தது.

உடனேயே மன்னருக்குத் தகவல் தரப்பட்டது. அவர் அதிர்ச்சியடையவில்லை. ஒரு வினாடி கண்களை மூடிக்கொண்டு, ''கதிரை வேலா!'' என்றார்.

பணிப் பெண்கள் புலர், தேவியின் சடலத்தை அந்தப்புர மஞ்சத்துக்குக் கொண்டுவந்து சேர்த்தனர்.

அரண்மனை பரபரப்படைந்தது மட்டுமல்ல— அவலக் குரலை அள்ளித் தெளிக்கவும் தொடங்கிவிட்டது.

தியாகராயர், முத்துமுடியார், இரத்தினா அனைவருமே அங்கு குழுமிவிட்டனர்.

எள்ளாளப் பேரரசரது இதயம் கனத்துக்கொண்டிருந்தாலும், தன் தேவி அந்தச் சமயத்தில் மாண்டது நியாயம்தான் என்பதை உணர்த்திக் காட்டியது. களங்கப்பட்டிருக்க முடியாது என்பதை ரோகண வீரன் கொண்டு வந்து கொடுத்த ஓலையைப் படித்து முடித்ததுமே முடிவுக்கு வந்து விட்டிருந்தவர் அவர். தேவியின்மீது களங்கம் கூறப்பட்டிருக்கிறது; அதுவும் நந்திமித்திரனால் என்பதைப் புரிந்துகொண்டிருந்தார் அவர். நந்திமித்திரன், அவருக்குப் பல ஓலைகளை எழுதியிருக்கிறான், பற்பல கருத்துக்களைத் தாங்கியதாக. ஒவ்வொரு ஓலையும் மன்னரால் மறக்க முடியாதவையாகவே இருந்திருக்கின்றன. மணி மணியான எழுத்துக்கள், நந்திமித்திரனுக்குரியவை என்பது, மன்னருக்குத் தெரிந்த ஒன்றாயிற்றே! அந்த எழுத்துக்கள் அனைத்தும், மன்னர் எப்போதாவது அந்த ஓலையைப்பற்றி நினைத்துக் கொண்டதும் எதிரே வந்து நிற்குமே! முட்டாள்தனமாகவே நந்திமித்திரன் நடந்துகொண்டு விட்டான். தேவியின் மீது களங்கம் கற்பிக்கப்பட்ட ஓலையை, அவனே எழுதிவிட்டான்!

படித்தவுடன், எவருக்கும் எழும் ஆத்திரம் அரசருக்கும் எழுந்தது; அடங்கிவிட்டது. அதனாலேயே ஓலைகொண்டு வந்தவனும் மன்னித்துத் துரத்தப்பட்டுவிட்டான். தன்மீது களங்கம் சுமத்தப் பட்டுக்கொண்டிருக்கிறது என்பது தியாகவல்லிக்குத் தெரியாமல் போகக்கூடும் என்ற அவரது கணிப்புத்தான் பொய்த்துவிட்டது. ஆனால், தெரிந்தால், அவர் உயிருடன் இருக்கமாட்டார் என்ற கணிப்பு மெய்யாகிவிட்டது. எனவே, தேவியின் மரணம் பற்றி அவர் அதிர்ச்சியடையவில்லை. கவலைகொள்ளவும் இல்லை.

நடக்கக்கூடாத நேரத்தில், இழக்கக்கூடாதவரை இழந்துவிட்ட சோகம், அமைச்சர் பெருமக்களைப் பற்றிக்கொண்டது. நாடு இருண்டுவிட்டது போன்ற துயரத்தை அவர்கள் அடைந்தார்கள்.

நல்லடக்கத்துக்கு வேண்டியனவற்றை உடனே கவனிக்கும்படிச் சொல்லிவிட்டு மன்னர் அமைதியாகிவிட்டார்.

செய்தியறிந்த தலைநகரத்துக்கு மக்கள் அனைவருமே தங்கள் தங்கள் வீட்டில் சாவு நடந்துவிட்டது போன்ற உணர்ச்சிக்கு ஆளாகி, உணர்விழந்து போனார்கள்.

தேவியாரின் திருமுகத்தைக் கடைசித் தடவையாகப் பார்த்துவிடுவது என்ற காரணத்துக்காக குழுமியவர்களது கூட்டத்தால் அரண்மனை அமர்க்களப்பட்டது.

மலர் வகைகளால் தேவியார் கொஞ்சங்கொஞ்சமாக மறைக்கப்பட்டுக்கொண்டிருந்தார்கள். அனைவரது மனத்திலும். ரோகணரடாவுக்குச் சென்ற தேவியார், எப்படிப் பிணமாகத் திரும்பினார் என்ற வினாவே வெடித்துக் கொண்டிருந்தது.

இறுதியாக, தேவியாரின் உடலைச் சுமந்து கொண்டு, அலங்கரிக்கப்பட்ட பல்லக்கு ஒன்று இடுகாட்டை நோக்கிப் போகத் தொடங்கியது, மக்கள் வெள்ளத்தைப் பிளந்து கொண்டு.

இருபுறத்திலும் கூடியிருந்த மக்கள் கோவெனக் கதறி யழுதனர். தங்கள் தங்கள் தகுதிக்கும் தரத்துக்கும், இயல்புக்கும் ஏற்ப, தாயை இழந்து விட்டதாகவும், மகளை இழந்து விட்டதாகவும், தலைமையை இழந்துவிட்டதாகவும் கூறிப் புலம்பினர்.

பல்லக்கு இடுகாட்டுக்குக் கொண்டு வந்து சேர்க்கப்பட்ட போதுதான், மன்னர் சற்று தளர்ந்தார். மனம் குமைந்தார். தேவியின் பிரிவு பற்றிக் கவலையடைந்தார். அந்த சாவுக்குள்ளே, புகுந்திருக்கும் நந்திமித்திரனின் சதிபற்றி மனம் கலங்கினார்.

எல்லாச் சடங்குகளும் முறைப்படி நடந்து முடிந்தன. சோழமாதேவி — தியாகவல்லி, இந்த மண்ணுலகை விட்டு நிரந்தரமாக மறைக்கப்பட்டு விட்டார்! மக்கள் அனைவரது கண்ணீர்ப் பெருக்குக் கிடையே!

* * *

அரண்மனையில் ஏற்பட்ட இந்தப் பரபரப்புக் கிடையே, மயங்கிச் சாய்ந்து கிடந்த இரத்தினா, நந்திமித்திரன் என்ற ஒரு தமிழனால் கடத்திச் செல்லப்பட்டு விட்டாள் என்ற செய்தியை அரண்மனையைச் சேர்ந்த எந்த ஒருவராலுமே தெரிந்து கொள்ள முடியாமல் போய்விட்டது.

நந்திமித்திரன், சோழ அரண்மனைக்குள் புகுந்து இரத்தினாவைக் கடத்திச் செல்ல தேர்ந்தெடுத்துக் கொண்ட நேரம், அவனைப் பொறுத்தமட்டில், மிகவும் சாதகமான நேரம்தான்! ஆனால், அவனுடைய வீரம் வெளிப்படும் நேரம் அது அல்லவே!

குதிரையின் முதுகில் அமர்த்தி வைக்கப்பட்டிருந்த இரத்தினாவை, நந்தி, இறுக அணைத்துக் கொண்டு, வேகமாகப் பறந்துகொண்டிருந்தான் மகாகாமாவை நோக்கி. சோழதேவியின் சடலத்தைக் கண்டு மயங்கிப் போய்விட்ட இரத்தினா, குதிரையின் ஓட்டத்தில், ஆண் ஒருவனது அணைப்பில்

****

பேசமாட்டாய்!

தேங்கனியும் தேனமுதும் திரண்டா லன்னத்
தெளிதமிழில் எளியவுரை நிகழ்த்தும் அண்ணா!
மாங்குயிலும் மணிதமிழும் குரலைக் கேட்டே
மாய்ந்துவரும்—தமதினந்தான் பாடு தென்று!
தேங்கலிலாத் திறந்துவிட்ட கடல்ம டைபோல்
தீங்கரும்பை வென்றிகொள ஓடும் பேச்சின்
பாங்கினையே நானெண்ணிப் பாடு கின்றேன்!
பகுத்தறிவே! உனைத்தானே தேடு கின்றேன்!

சித்திரமே! செந்தமிழே! சீர்தி ருத்தச்
செங்கதிராம் எம்பெரியார் சிரிப்பில் வந்த
வித்தகனே! வெண்தாடி வேந்தர் தேரில்
வீதிவலந் தான்வந்த வெண்ணி லாவே!
இத்தரையில் நித்தரையே இறுதி என்று
ஏகிவிட்டாய்! இயற்றமிழே! எனைம றந்தே!
கத்துகிறேன் கடலுடனே! காண மாட்டாய்!
கடலேதான் வற்றிடினும் பேச மாட்டாய்!

ஆரியத்தின் மாயைகளைக் கண்டறிந்தே
அறைந்திட்டாய்! தமிழர்க்கே அபாய மென்று!
சீறியஅப் பாம்பினைத்தான் தந்தி ரத்தால்
சீரழியச் செய்திட்டாய்! சிரித்தார் தந்தை!
காரியங்கள் பலநடக்கும் கலைஞர் ஆட்சி
காணுகின்றேன்! இருப்பினும்உம் கருப்பு டைதான்
ஏறியநல் தடந்தோளை எண்ணி எண்ணி
ஏங்குகிறேன்! எமதண்ணா எங்கே சென்றாய்?

— புலவர். சி. தமிழ்மணி.

★

****

கொஞ்சங் கொஞ்சமாக உணர்வடைந்தபோது, தான் அரண்மனையில் இல்லையென்பதும், தன் எதிரே தனது பெருமல் பெற்றதாயின் சடலம் கிடக்கவில்லை என்பதையும் மெள்ள அறிந்தாள். உடனேயே முழு உணர்வும் திரும்பப் பெற்றுவிட்டபோது, தான் நந்திமித்திரனால் கடத்திச் செல்லப்படுவதையும் புரிந்துகொண்டு விட்டாள்.

நந்திமித்திரன் மீண்டும். அனுராதபுரம் அரண்மனைக்குள் நுழைய முடியாது என்ற தைரியத்தில், அனுராதபுரம் அரண்மனையில் தனக்கு முழுப் பாதுகாப்பும் உண்டு என்ற எண்ணத்தில் எழுதிவைத்து வந்த அந்த ஓலையின் விளைவுதான் அது என்பதை எண்ணிக்கொண்டபோது அழுகை வந்துவிட்டது இரத்தினாவுக்கு. இனி, தான் தப்புவதற்கு வழியில்லை என்பதையும், நந்தியை கணவனாக ஏற்பதைத் தவிர தன்னால் எதுவும் செய்ய முடியாது என்பதையும் ஒரு கணத்தில் முடிவு செய்து கொண்டாள்.

இரத்தினா உணர்வு பெற்றுவிட்டாள் என்பதை அறிந்த நந்தியும். அவனது அணைப்பை மேலும் இறுக்கிக்கொண்டு, "நான் வீரன்தான் என்பதை இப்போது ஏற்றுக்கொள்கிறாயா இரத்தினா!" என்றான். "அடடா! எவ்வளவு பெரிய போர் புரிந்து என்னை இப்போது மீட்டுக்கொண்டு வருகிறீர்கள்! நான் பாராட்டாமலிருக்க முடியுமா? என்று சொன்னவள், 'இழவு வீட்டில் நுழைந்து மணப் பெண் தேடும் உங்கள் வீரம், பாராட்டத் தக்கதுதான்" என்றாள்.

நந்திக்கே சிரிப்பு வந்துவிட்டது. "சந்தர்ப்பம் அப்படி இரத்தினா! நான் மகாகாமாவை விட்டுப் புறப்படும்போது, உங்கள் அரசியைப் பிணமாகக் காணவேண்டியிருக்கும் என்று நினைத்துக் கூடப் பார்க்கவில்லையே!" என்றான். தொடர்ந்து "ஏன் இரத்தினா, உங்கள் அரசி, ரோகண நாட்டிலேயே இறந்துவிட்டதாகப் பேசிக் கொண்டார்களே, உண்மைதானா? யாராவது கொலை செய்துவிட்டார்களா?" என்றும் கேட்டான்!

"ஆமாம்! நீங்கள்தான் கொலை செய்திருக்க வேண்டும்; என்னைக் களவாடிச் செல்ல அருமையான சந்தர்ப்பம் கிடைக்க வேண்டும் என்பதற்காக" என்றாள் இரத்தினா.

அவள் கூறியது கேட்டதும், நந்தியின் மனத்தில் முள் தைத்தது போலிருந்தது. இப்படி ஒரு பழியா! இந்தப் பழி ஏற்படுவது தனக்கு உகந்ததா! என்ற முறையில் சிந்திக்கத் தொடங்கிவிட்டான். தான் தேவியின் மீது களங்கம் சுமத்தியதற்குக் காரணம், எள்ளாளரைக் குழப்பத்திலாழ்த்த வேண்டும், என்ற ஒரே காரணத்துக்காகத்தான்! அதுஇவ்வளவு பெரிய பூகம்பத்தை ஏற்படுத்தும்' என்று நினைத்துக் கூடப் பார்க்கவில்லை!

இதுவரையில் தான் ரோகணாவுக்கு எதிராகச் செய்த எல்லா கேடுகளுக்கும் தலைமையானது இது தான் என்று அவன் எண்ணிப் பார்க்கும்போது, அவனை அறியாமலேயே மனம் கலக்கம் அடைந்தது.

அந்தக் கலக்கத்தைத் தூண்டிவிட்டாள் இரத்தினா. "நீங்கள் தமிழ்ப் பெருங்குடிக்கு இழைத்துள்ள மிகப் பெரிய கொடுமை இது; மிகப் பெரிய துரோகம் இது; உங்களால்தான் என் தாய் கொல்லப்பட்டாள்" என்றாள் மீண்டும்! "இரத்தினா!" என்று அலறியவன், ஓடிக்கொண்டிருந்த குதிரையை நிறுத்திவிட்டு, "அப்படிச் சொல்லாதே இரத்தினா! தமிழ்த் தாய்க்கும், தமிழினத்துக்கும் நான் எவ்வளவோ துரோகத்தைச் செய்திருக்கிறேன்! என்றாலும் நீ கூறுவதுபோல நான் சோழ அரசியைக் கொலை செய்யவில்லை இரத்தினா, அப்படி நினைக்கக்கூடவில்லை இரத்தினா!" என்றான். அவளைத் தன்மார்புமீது சாய்த்துக்கொண்டு. "ஆனால் இரத்தினா, நான் செய்த பாவம் என்ன தெரியுமா? அந்த தாயின்மீது களங்கத்தைச் சுமத்தி உங்கள் அரசருக்கு ஓலைஅனுப்பினேன்! போரில் அவர் குழப்பமடைய வேண்டும் என்பதற்காக. இதன் எதிரொலியை இந்த வடிவத்தில் நான் எதிர்பார்க்கவே இல்லை இரத்தினா!" என்னான்.

"எப்படியோ எங்கள் தேவியின் சாவுக்குக் காரணம் நீங்கள்தான்! வருங்கால வரலாற்றின் களங்கமாகிவிட்ட உங்களை நானும் மணக்கவேண்டுமா! மாலையிட வேண்டுமா!" என்றாள் இரத்தினா, வருத்தத்தோடு!

"அப்படிச் சொல்லாதே இரத்தினா! என் தவறுகளுக்கெல்லாம் கழுவாயாக நான் இப்போது உனக்கு வாக்குறுதி தரமுடியும்! ஆமாம் இரத்தினா! ரோகணாவுடன் சேர்ந்து நான், அனுராதபுரத்துக்கு எதிராகச் செயல்படமாட்டேன்! என்னை நம்பு இரத்தினா! நான் மறுபடியும் ஒரு தமிழனாக வாழ்ந்து காட்டும் வாய்ப்பினை எனக்குக் கொடு இரத்தினா!" என்றான் நந்தி. குரல் கம்மி இருந்தது அப்போது.

நந்திமித்திரனிடம் ஏற்பட்ட அந்த மாற்றம் குறித்து இரத்தினா வியந்து போனாள். குதிரை மறுபடியும் பறக்கத் தொடங்கியது மகாகாமாவை நோக்கி.

ஃ ஃ ஃ

மறுநாள். மாலை. ரோகணாவிலிருந்து தூதுவன் கொண்டுவந்து கொடுத்துவிட்டுப் போன ஓலை, எள்ளாளப் பேரரசரின் கையில் படபடத்துக்கொண்டிருந்தது.

கனலை உமிழ்ந்துகொண்டிருக்க வேண்டிய அவரது கண்கள், சோர்வால் அயர்ந்துபோய் இருந்தன.

ரோகணா, போர் தொடுக்க முடிவு செய்துவிட்டது. இரண்டொரு நாட்களிலேயே அதன் படை, அனுராதபுரத்தைத் தாக்கும் — என்ற அறிவிப்பை மறுபடியும் படித்துவிட்டு, மன்னர் சிரித்துக்கொண்டார் இகழ்ச்சியாக.

எதிரே இருந்த தளபதியாருக்கும், மேனிவிடங்கனுக்கும், முதலமைச்சருக்கும், அதைப் பார்த்து மன்னரின் மனநிலையைப் புரிந்துகொள்ள முடியவில்லை. ரோகணாவின் போரை, அனுராதபுரம் எதிர்த்து முறியடிக்கப் போகிறதா இல்லையா? என்ற சந்தேகம் தியாகராயர் மனத்தில் வளர்ந்துகொண்டிருந்தது.

மன்னரது மனத்திலோ, பௌத்த மகா சபைத் தலைவர் ஆமத்திய மகாதேரரைப் பற்றியும், அவர் பௌத்த மகா சபைக் கூட்டத்திலிருந்து வெளியேற நேர்ந்தது பற்றியும் எண்ணங்கள் பிறந்துகொண்டிருந்தன.

முதலமைச்சரது உள்ளத்திலேதான் இரத்தினா காணாமற் போயிருப்பது பற்றிய எண்ணங்கள் வடிவெடுத்துக் கொண்டிருந்தன.

(அடுத்த இதழில் முடியும்)

வங்கத் தந்தையே! வாழ்க! வாழ்க!!

(புலவர். அரிமதி தென்னகன்)

முஜிபிர் ரகுமானே! வங்கத்து மூத்தவனே?
தங்கமயமான தாயகத்தின் தலைமகனே!
நீ எங்கோ இருக்கின்றாய்; ஆனால்
உன் கொள்கை வெற்றியுலா வருகிறது!!
உன் புகழ் முழக்கம் உலகைத் திகைக்க
வைக்கிறது!!

அன்று
வங்க மண்ணில்...
எத்தனை இருட்டுகள்!!
துயர இருட்டு;
அடிமை இருட்டு;
இன்று
அத்தனை இருட்டும் அகன்றன!
பூக்கும் மலர்க்காடாய்
பொங்கும் புதுவெள்ளமாய்
புதிய நாடு! புரட்சி நாடு!!
வங்கநாடு வாழ்க எனும் முழக்கம்!!
வங்கத்தந்தை வாழ்க எனும் ஒலி—
வானை இடித்து வரலாறு கொண்டது!!
சிறையில் இருக்கும் சிந்தனை உருவே!
கொடுமையில் வளர்ந்த உணர்ச்சிக் குயிலே!
அடிமை இருட்டின் கொடிய பகை நீ;
அன்னை மொழிக்கோ அன்பு மகன் நீ;
ஓடும் இருளை ஓட்டிய கதிர்கள்
உன்னிடமிருந்தே பிறந்தன! எனவே,
சுதந்திரச் சூரியன் நீயெனில் தவறு!!
உரிமை நிலா நீ; உலக ஒளி நீ!;
குருதியில் பூத்த குளிர்மலர் வங்கம்—
குவிக்கும் மணமெல்லாம் உன் புகழ் கூறுமே!!
நெருப்பில் விளைந்த நெற்கதிர் வங்கம்!
நினைவில் கண்ட உழவனே நீ தான்!!
ஏழரைகோடி மக்கள் இதயம்
எழுச்சி வானம், என்றால்—

நீயோ மின்னும் துரு மீனம்!!
காற்றைச் சிறையில் காண முடியுமா?
கனலைத் துணியால் கட்ட முடியுமா?
புரட்சிக் கனலே! உணர்ச்சிப் புயலே!
உன்னை யடைக்க ஒரு சிறை உண்டா?
தன்னை மறந்த தலைவனைக் கட்ட
தளையும் உண்டா வலையும் உண்டா?
விண்ணில் பிறந்த மின்னலை அடக்க
விலங்கும் உண்டா? விதியும் உண்டா?
இல்லை! இல்லை!!
தன்னைத் துறந்த தலைவா! தரை மின்னலே!
உன்னை அடைக்கும் சிறையும் உண்டா?
இல்லை! இல்லை!!
அதோ!
கதவுகள் திறக்கின்றன! வரவேண்டும்—
கைகள் கூம்புகின்றன!
பிரிவால் கூம்பிய இதய மொட்டுகள்
தலைவனைக் கண்டு தளையவிழ்க் கின்றன!!
காலதேவனின் கண்களும் பனிக்கின்றன!!
நீ திடீரென்று தேவனுகிறாய்;
ஆமாம்!
உன் பாதங்கள் தரையில் படவில்லை!
களிப்புக் கண்ணீரால் கண்கள் மூடவில்லை!!
வங்கத்துப் பூக்களல்லவா,
வாட மறந்தன!!
கோடி மலர்கள், உன் பாதங்களைத் தாங்க
குனிந்து கொடுக் கின்றன!!
வங்கம் பொய்கையாகிறது;
நீயோ, தாமரை யாகிறாய்!!
வாழ்க வங்கச் சிங்கம்!
வாழ்க வங்க நாடு!
வாழ்க வங்க அன்னை!
இம் மூன்று முழக்கங் களும்
முத்துக்க ளாகச் சிந்து கின்றன!!

ஓ, வங்கத்து வள்ளலே!
உன் ஒளி பட்டு,
பகை விண் மீன்கள் பட்டுப் போயின!!
பாகிஸ்தான் மட்டுமா பகை விண் மீன்கள்?
இல்லை,
மொழியாதிக்கம்,
இனச்சுரண்டல்,
ஏகாதிபத்தியம்
எல்லாமே பகைகள்தாமே!!
ஒற்றுமையாக இருப்போம்,
ஒருமையைக் காப்போம் என்றெல்லாம்கூறி
ஏமாற்ற நினைக்கும் எள்மூக்கு இதயங்கள்
எல்லாமே பகைகள்தாமே!!
உலகத்து விடுதலைப் பறவைகளுக்கு,
ஏ, விடுதலைக்குயிலே!
உன் பாட்டு விருந்தாக அமைந்துவிட்டது!!
கூனிக்கிடந்த, குறுகிப் போன,
ஏனிந்த வம்பென்று இளகிப் போன
எத்தனையோ நெஞ்சங்களுக்கு
உன் வரலாறு ஓர் ஊட்ட மருந்து!!
அறுபட்ட சங்கிலிகள்,
அறுபடாத சங்கிலிகளுக்கு எச்சரிக்கைச்
சின்னங்கள்!

அந்த ஆணவ வளையங்கள்,
அதோ...
உன் உரிமை மூச்சுபட்டு ஆடத் தொடங்கி
விட்டன.

சாவிற் கஞ்சாத சரித்திர நாயகா!
ஆடத் தொடங்கிய ஆணவ வளையங்கள்
அறுபடத்தான் போகின்றன.
அப்போது,
உதிர்ந்து விழும் வளையங்களின் ஒலி
உன் புகழ் ஒலியாகவே இருக்கும்!!
அதற்காகவாவது
நீ பல்லாண்டு வாழவேண்டும்!

★

நட்பு வளரட்டும் வெடிமருந்தும் உலரட்டும்

(புலவர் கோ. அண்ணாமலை)

சிறப்புக் கட்டுரை!

'இந்தியாவுடன் ஆயிரம் ஆண்டுப் போர் நடத்துவேன்!' என்று கொக்கரித்த புட்டோ, தன்னுடைய நாடு, எண்ணிப் பதினான்கு நாட்கள்கூட அப்படிச் செய்ய இயலவில்லை என்பதை உணர்ந்திருப்பதற்கான அறிகுறிகள் தெளிவுபடுகின்றன. அமெரிக்க நட்பும் சீனத்துத் தோழமையும் புட்டோவின் நாக்கை நீளச் செய்திருந்தன. இந்தியாவின் உறுதியும் தீரமும் வங்க நாட்டு மக்களின் துன்பம் தாங்கும் ஆற்றலும் எழுச்சியும், நீண்ட புட்டோவின் நாவை ஒட்ட நறுக்கிவிட்டதை உலகு அறிந்து கொண்டுவிட்டது."

"வங்க நாட்டின் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் ஷேக் முஜிபுர் ரகிமானை விடுதலை செய்ய இணங்கியதும், 'இந்தியத் தலைமை அமைச்சர் அழைத்தால் புதுதில்லிக்கு வருவேன்' என்று கூறியதும் சிறிதளவேனும் அவர் இறங்கு முகத்தில் இருப்பதைக் காட்டுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, 'என்னுடைய நாட்டை இனி எந்த இராணுவ சர்வாதிகாரமும்' அழித்துச் சிதைப்பதை காணும் கடைசி மனிதனாக நான்தான் இருப்பேன்!' என்று அமெரிக்க 'டைம்' இதழின் நிருபருக்கு அளித்த பேட்டியில் புட்டோ கூறியிருப்பது, முற்றிலும் உண்மையாகவே இருந்திடுமானால், மேற்குப் பாகிஸ்தான் மக்களுக்குக்கூட ஜனநாயகத்தை வழங்கிய பெருமை நம் இந்தியாவுக்கும் வங்க நாட்டுப் பெருவீரன் ஷேக் முஜிபுர் ரகிமானுக்குமே வந்து சேரும்.

நாள்தோறும் புட்டோ பேசி வருகின்றவைகளால் அவருக்கு உண்மை நிலை ஓரளவுக்கேனும் தெளிவுபடுகின்றது என்று அறிய வாய்ப்பு ஏற்படுகின்றதேயல்லாமல், அவரை நாம் முழுக்க முழுக்க நம்பி 'அசந்திருப்பதற்கான' காரணங்கள் இனி என்றும் ஏற்படுவதற்கில்லை. அவருடைய தெளிந்த அறிவில் நம்பிக்கை கொள்வதைக் காட்டிலும் நிதானமற்ற முட்டாள்தனத்திலும் அவருடைய 'ஆபத்துக் குதவி'களான நிக்ஸன் நிர்வாகத்தின் குழம்பிய அறிவிலும், சீன அதிகாரத்தின் ஈனத்தனத்திலும்தான் நாம் கருத்தும் கவனமும் செலுத்த வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

பல நேரங்களில் அறிவுமிக்க வாக்குமூலங்களைத் தந்தாலும் புட்டோ அறிவு மயங்கி உளறுமலும் இருப்பதில்லை. அண்மையில் அவர், இந்தியாவைக் கேட்கிறார்: 'இந்தியா பாகிஸ்தானை அங்கீகரிக்க வேண்டும்!' என்று இந்திராகாந்தி மிக அழகாகவும் நகைச் சுவையோடும் அதற்குப் பதிலளித்தார்; 'பாகிஸ்தானை அங்கீகரிக்க வேண்டும் என்பதன் மூலம் அவர் என்ன சொல்லுகிறார் என்பது எனக்கு விளங்கவில்லை' என்றார். நாம் பாகிஸ்தானை மட்டுமல்ல! வங்க நாட்டையும் அங்கீகரித்திருக்கிறோம்" என்றார். 31—12—'71 அன்று நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் திருமதி காந்தி இவ்வாறு கூறினார்: "I did not understand what Mr. Bhutto meant by asking whether India recognised Pakistan. India not only recognised Pakistan but also Bangla-Desh."

ஏன் புட்டோஉளறுகிறார் என்று அறிந்துகொள்ள நமக்கு அதிக நேரம் வேண்டாம். அவருக்கு இன்னும் 'பதை பதைப்பு' அடங்கவில்லை. அவர் இன்னும் அவமானத்தோடு கூடிய சீற்றத்திலேதான் இருக்கின்றார். சீற்றமும் குழப்பமும் தெளிந்து விட்டவனைப் போல காட்சி கொடுக்க முற்படுகிறார். எனினும் சில வேளைகளில் குழப்பம் அவரை உளறவைக்கிறது என்றாலும் அவர் கூறும் சில மொழிகளை நாம் 'பெருந்தன்மையோடு' எடுத்துக் கொள்ளலாம்.

'ஆயிரம் ஆண்டுப் போர் நடத்துவேன்' என்று எக்காளமிட்ட அதே மனிதர் இன்று, 'We do not want eternal enmity with India. We have never wanted if" என்று சொல்கிறார். "இந்தியாவோடு தீராப் பகை—முடிவற்ற காழ்ப்புக் கொள்ள விரும்பவில்லை. எப்போதும் விரும்பியதுமில்லை"—என்கிறார் புட்டோ. நம்மைப் பொறுத்தவரை பாகிஸ்தான் பகை நீங்கி நட்புணர்வோடு கூடிய அண்டை நாடாக இருக்க வேண்டுமென்றுதான் விரும்புகிறோம். ஆனால் அதற்காக புட்டோவின் இத்தகைய பசப்புமொழிகளை நம்பி என்றைக்கும் நாம் அயர்ந்திருக்கப் போவதில்லை என்பதனையும் உறுதிப்படுத்திக்காட்ட விரும்புகிறோம். ஏனென்றால் உலக வரலாற்றில் நட்புபற்றியும் ஒற்றுமை பற்றியும் பேசிக்கொண்டே போர்த் தாக்குதல்கள் நடத்திய மனிதர்களை நாம் பார்த்திருக்கிறோம்.

1941-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22-ஆம் நாள் காலை 4 மணிக்கு ஹிட்லர் ரஷ்யாவின்மீது படை எடுத்துத் தாக்கினார். ஆனால் அன்றிரவு வரையிலும் ரஷ்யாவில் இருந்த ஜெர்மன் தூதர் ரஷ்யாவுக்கும் ஜெர்மனிக்கும் இடையிலான நட்பு ஒற்றுமைபற்றி வாக்குறுதிகளைத் தாராளமாக வாரி வழங்கிக் கொண்டிருந்தார். இருந்தவர் ஜெர்மன் படைகள் ரஷ்யாவின்மீது தாக்குதல் தொடங்கிய ஒருமணி நேரத்திற்குப் பின் அதாவது அன்று காலை 5 மணிக்கு ரஷ்யாவின் வெளிநாட்டு அமைச்சரைச் சந்தித்து ஜெர்மனிக்கும் ரஷ்யாவுக்கும் போர் என்னும் நிலைமையைச் சொன்னார். இப்படிப்பட்ட வரலாற்று உண்மைகள் நாம் நினைவில் இருக்கின்றன. எனவே எந்த நிலைமையை நாம் இப்போது தேர்ந்தெடுக்கவேண்டும்?

'ஒற்றுமை நட்புபற்றி பேச்சுமொழிகளும் நடைபெறட்டும்; கூடவே வெடிமருந்தும் காயட்டும்!' என்னும் நிலைதான் நாம் எடுத்துக் கொள்ள வேண்டியது! பாக்கிஸ்தான் உண்மையிலேயே நம்மோடு நட்பையே விரும்புகிறது என்பதற்கான காரண காரியங்கள் ஐயந்திரிபற நாட்டப்படும் வரை நமது நிலை இப்படித்தான் இருந்து தீரவேண்டும். புட்டோவின் நட்பு நாட்டம் 'நம் நாட்டில் பெரும்பகுதி பிரிந்து போய்விட்டதே — சேர்ந்திருந்த போதே பகை வெல்ல முடியவில்

(15-ஆம் பக்கம் பார்க்க)

காஞ்சி பொங்கல் மலர்

கருத்துக்கு நல்விருந்து

நெஞ்சை அள்ளும்
சிறுகதைகள்
தெளிவளிக்கும்
கட்டுரைகள்
இன்சுவை மிகு
கவிதைகள்



பொங்கல் மலர்

முல்லை மணம் முக்கனிச் சாறு

முத்துப்பேழை

கருத்துச் சோலையில் உலவிட!
முத்தமிழ்ச் சுவை பருகிட!





படைப்புகள் நிறைந்த
அறிவுப் பெட்டகம்

காஞ்சி
பொங்கல் மலர்

தேவை குறித்து இன்றே தெரிவித்திட வேண்டுகிறோம்

விலை: ரூ. 2.

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

விலே இன்பம் பாடியதோ? இசையிலே பேரின்பம் கனிந்ததோ?

“அன்பே!.........” நான் குழறினேன். ஓடிச் சென்று அவள் பொன்னார் திருத்தாமரை மலரடி வீழ்ந்தேன்.

எழில் மகள் இரு மலர்களால் என்னை ஏந்தினாள். ‘நான் பிறந்ததன் பேறு பெற்றுவிட்டேன்!’ என்று சொல்ல நினைத்தேன். வாய் திறந்தேன்; ஒலி காணேன்!

அவள் சிரிப்பால் அரசாட்சி செய்தாள்.

இனிமையே! நீ இவளிடம்தான் வாழ்கிறாயா?

“கலைச் சுவைஞரே, என்னை நீ காதல் முறுகி எழப் பார்த்த பார்வையால் நான் கல்லுருவம் துறந்து கன்னியெழில் வடிவமுற்றேன். உன் உணர்வின் ஆற்றல் என் வாழ்வின் ஊற்றுக் கண்ணாகி விட்டது!

எனக்கு ஏதும் புரியவில்லை.

கடற்கரைக் கோவில் கட்டழகுக் காமர் மகளாக கன்னியோவிய விருந்தாகி விட்டதா? நெய்தற் கோட்டம் நேரிழையாகி விட்டாளா?

முத்தும் மணியும் பளபளக்க, மூங்கிற்றோளின் மின்னொளி கண் கூச, அழகு முகத்தில் அருளருவியொழுகப் பெண்மையின் பெருமைப் பேசாப் பேரிலக்கியமாகக் கண்ணில் கலையின்பம் கவின, மெல்லடி ‘மண் படாத என் நெஞ்சில்’ நடந்து வந்தாள். அவளின் எடுத்த அடி ஒவ்வொன்றுக்கும் இடையின் ஒரு மருங்கசைய, அதற்கிசைய மறுதோள் முன்னேறி யசைய, அழகோ அழகென அறிவு வியந்தலற நடந்தாள். வாழ்வின் கற்பனையே நடந்ததுபோலப் புலமையின் தாய்மையே நடந்ததுபோல நடந்தாள்.

வந்தவள் என்முன் நின்றாள். இலக்கணத்தில் வடித்த பெண்மைகளின் விளக்கமெல்லாம் பாவலரின் கற்பனை யென்றெண்ணினேனே! இதோ; இவள் முன்னே அந்த இலக்கிய வண்ணனைகளெல்லாம் கால் தூசுக்கும் பொறாதே! ஓவியம், படிவ வார்ப்பு எல்லாம் இப்பேரெழிற் கன்னியின் கவர்ச்சியை வடிக்கும் வல்லமை வாய்ந்தவையல்ல.

மரங்களில் தளிர்கள் சிரித்திட, மலர்கள் பூத்துக் கனிகள் தேன் மழை சொரிந்தன. கடலிலே மக்கள் மனங்கள் பூவாணக் கூத்தாடின. உயிரின் புத்தாட்சி உலகினை மட்டுமின்றி அண்டவட்டங்களையும் ஆட்சி செய்து சிலிர்த்தன.

“ஐயா, வாழ்வையும் கலையையும் இருவேறு திசையில் வைத்து எப்போதோ ஒருமுறை அதன் பக்கம் திரும்பி அரைகுறையாகப் பார்க்கும் மக்கள் மந்தையில், நீர் தனிக் கலை ஆர்வலராக இருப்பது மகிழ்வளிக்கிறது.”

“தாயே, இன்று வையகமே தனிப் பொலிவு பெற்றுவிட்டதே! கடலின் வண்ணம் கலைக் கோவிலாகிவிட்டதே! வானத்தில் என்ன என்ன வியப்பு ஓவியங்கள்!

கடல் நீரைச் சற்று சுவைத்துப் பாரும்.”

கடலருகில் ஓடினேன். காலில் விழுந்து கடலலை வணங்கி வரவேற்புப் பா பாடியது. ஒரு பிடி தண்ணீரை அள்ளியெடுத்தேன். பொன்னீராகத் தோன்றியது; பருகினேன். ஆ! என்ன புதுமை. தேன் போல இனித்தது!

வியப்போடு அவளைப் பார்த்தேன்.

“தாயே, கடல் நீர் இனிப்பு நீராகிவிட்டதே! என்ன மாயம்?”

“மாயமல்ல. மனத்தின் மலர்ச்சியால் இயற்கை யன்னை தன் மனத்தை விளைத்தாள்.”

“அம்மா, உன்னை ... உன்னை ...”

“நான் இந்தக் கடற்கோவில்!”

எனக்கு ஒரே வியப்பு! கற்கோவில் கட்டழகுக்காரி கையாகும் வியப்பு எத்தகைய புதுமை! அவள் நகைத்தாள். வாழ்வென்ற பேரியாழிலே ஆயிரங்கோடி உயிர் நரம்புகளிலிருந்து வண்ண இசையோவிய விருந்துகள் வடித்தன.

கடற்கரை மணலெல்லாம் பொன்துகள்! பூந்துகள்! மணலில் இருவரும் அமர்ந்தோம்.

யாழ் முயன்றது; ஒளியூற்றுகள் வானவில் ஊற்றுகளாகப் பொங்கி விண்ணளாவ ஓவியத்திரைக் கதிர்களைப் பாய்ச்சின. எல்லாம் புதுமை! எல்லாம் புதிர்! எல்லாவற்றிலும் ஓர் இனிய கனவு மயக்கம்!

“நான் இளவேனிலின் இனிய கற்பனைகள் பருவப் பொலிவாகப் பூத்துக் குலுங்குங் காலத்தில், இன்னதென அறிய முடியாத காலப் பரப்பில், ஒரு மென்மையான தாமரை மலரின் தேனுலகில் தோன்றினேன். நான் உணர்வடைந்தபோது நினைவின் முதல் ஒளிக் கதிர் வந்து என்னை முத்தமிட்டது. வானத்து உடுக்களின் வண்ண ஒளிக் கதிர்கள் ஒவ்வொன்றாக என்னைத் தாலாட்டின. என்னழகை விடியலும், அந்தியும் ஒப்பனைகளால் பொலிவுபெறச் செய்தன. வானுலகிலிருந்து பல வனப்போவியங்கள் மண்ணில் பூத்தன. என் மேனிமீது அவ்வெழிலோவியங்கள் கொடிபோலப் படர்ந்து பூத்தன; காய்த்தன; கனிந்தன. அம்மலரின் மலர்ச்சி, காயின் கனிவு, கனிவின் இனிமை, உயிரின் எழில், கொடியின் பிணைப்பு, எல்லாம் என்னுள் கலந்து பேரின்பத் தேனூறி வென்றன. நான் கற்றளியாகக் கன்னிமை மலர்ச்சி பெற்றேன்.

காலம் என்னை நோக்கிச் சிரித்தது. அன்று என்னருகில் இக்கடல் இல்லை. எங்கோ தொலைவில் இருந்தது. பச்சைப் பசுங்காட்டில் நான் தனித்தவம் செய்து கொண்டிருந்தேன். வண்டுகள் எப்போதேனும் வந்து என்செவிகளில் இன்னிசை பாடி நாடகம் நவிற்றிச் செல்லும், வாழ்வின் இழுக்குகள் என்னைப் பார்த்ததும் இல்லை.

உலகில் எத்தனையோ மக்கள் தோன்றித் தோன்றி மறைகின்றனர். களத்து நெற்குவியலில் ஒரு கைப்பிடி நெல்லை எடுத்தால், அது குறைந்து போனது தெரியாது. உலகின் உயிர்த்திரளில் இறப்போர் தொகை வெளிப்படையாகத் தெரியாததற்கு இதுவேகாரணமாகும். எடுக்க எடுக்கப் புதுநெல் கொட்டுவது போலப் புத்துயிர்த் தோற்றம் உண்டாகிக்கொண்டேயிருப்பதால் குறைவேயில்லாமல் மறையும் உயிர்கள் புலப்படா

முக்கிய அறிவிப்பு

அடுத்து 16-1-’72-ஆம் நாளைய ‘காஞ்சி’ இதழ் வெளிவராது என்பதையும், அந்த இதழ் பொங்கல் மலராக வெளிவரும் என்பதையும், அறிவித்துக் கொள்வதுடன், சந்தாதாரர்கள் மலருக்கு என்று தனியாக ரூபாய் இரண்டு M. O. செய்யவேண்டும் என்பதையும், தெரிவித்துக்கொள்கிறோம்.

பாக்கி வைத்துள்ள விற்பனையாளர்கள், தங்கள் பாக்கித் தொகை முழுவதையும் அனுப்பினால்தான் அவர்களுக்கு மலர்கள் அனுப்பப்படும் என்பதையும் அறிவித்துக்கொள்கிறோம்.

நிர்வாகி ‘காஞ்சி’,
காஞ்சிபுரம்-3

தொழிகின்றன. மக்கள் தாம் வாழ முடியாத காலம் உலகிற்கு இருக்கும் என்பதை உணர்ந்தனர் செம்மையாக உணர்ந்தோர் சீரிய புலவோராய்க் கலைஞராய் காலம் வென்ற ஆக்கங்களை உருவாக்கி யளித்து மறைந்தனர்.

அத்தகுகலைத்தந்தையின் காதற் திருப்பணியில் நான் உருவானேன் அரசு புகழ்ந்தேற்றும் அழகுக் கற்றளியாய் அன்று தொட்டு இன்று மட்டும் உள்நாட்டு — வெளிநாட்டுப் பார்வையாளரின் பார்வை என்னை முழுக்காட்டிட உயிர் சுமந்திருக்கிறேன். ஆயின், கலையுணர்வோடு வருபவர் மிக மிகக் குறைவானவர்களே. ஏதோ எண்ணங்களோடும், ஏக்கங்களோடும் பொழுதுபோக்காகப் பட்டும் படாமலும் பார்த்துவிட்டுத் தத்தம் விருப்பு வெறுப்புகளுக்கு இரை தேடப் போகிறவர்கள்தான் மிக மிகப் பலர்.

அழகின் விழிகளில் கண்ணீர் நிலவுகள் சிந்தின. அந்தச் செவ்விதழ்களின் ஒயிலாட்டம் விம்மலின் துடிப்பா?

"கண்ணே, நீ யழலாமா? உன் கண்ணீர் என் உயிரை அரியும் வாளல்லவா?"

ஒரு மலர், இன்னொரு மலரின் பனித் துளிகளை வழித்துத் தெறித்தது.

"இலைகளின் சலசலப்பைக் கேட்டுப் பறவைகள் அஞ்சுவதில்லை; ஆயின் மக்கள் குரல் கேட்டு மருள்கின்றன. அதுபோல நானும் மக்கள் வருகையால் மனம் புண்படுகிறேன்!"

"உணர்ச்சிகளைச் சில்லறையில் விற்கவே மக்கள் துடி துடிக்கின்றனர். சிதறும் உணர்ச்சிகளை முழுமையுணர்வாக்கி முழுப் பயன் விளைக்க முறையாகப் பயன்படுத்த வேண்டும்."

"'நினைவின் ஒழுங்கு' நிலை பெறக்கூடிய இயல்பை யுண்டாக்காத கல்வியை விட, அறியாமை நன்று!"

எனக் கூறினாள் கற்றளிச் செல்வி.

"ஆம். ஆம். உண்மை." எனக் கதறினேன்.

புரண்டு கீழே விழுந்தேனா? அடடா! இரவாகிவிட்டதே. மல்லையின் கடல் ஆர்ப்பரித்தது. வீட்டு நினைவு அப்போதே தோன்றியது!

★

(12-ஆம் பக்கத் தொடர்ச்சி)

லையே' என்னும் எண்ணத்தால்— இயலாமையால் எழுந்ததே தவிர உண்மையான விருப்பமாக இருக்க முடியவே முடியாது. அடிபட்ட புலி — அவமானப்பட்ட சீமான் நிலை அவருடையது. சண்டை ஆட்டுக்கடாவின் பின்வாங்கல் அது. அவர் அயர்ந்து போய் உண்மை உணர்ந்து திருந்தினாலும் அவருடைய அவமானத்தில் தனக்கும் பங்குண்டு எனக் கருதும் அவர் தோழர் நிக்ஸன் திருந்த விட்டிடுவார் என நாம் எதிர்பார்க்க நியாயங்கள் இல்லை.

ஆகவே புட்டோவின் வெளிப்புற மொழிகள் நம்முடைய விழிப்புணர்வை - எழுச்சியை தளர்த்திடும் தந்திரமாக அமைந்துவிடக் கூடாது!

அன்பு மார்க்கத்திலும் கவிதை இலக்கியங்களிலும் நாட்டம் செலுத்திப் புகழ்மிக்க வங்காளிகள் இனி கவிதைகளும் இலக்கியங்களும் வடிப்பதை மறந்து போர்க்களக் கருவிகள் வடிக்கவும் அமர்க்களத்து வித்தைகள் பயிலவும் முடிவு செய்துவிட்டதாக வங்காள நாட்டு நாவலாசிரியை ஒருவர்— ஹமீதா பேகம்-என்பார், டிசம்பர் 16—17ஆம் நாளில் நடத்தப்பட்ட அறிஞர் கூட்டத்தழிவை — பிணநாற்றத்தினூடும்—காக்கை கழுகு —நரிக்கூட்டத்துக்கு மத்தியிலும் கண்ட பின்னர், அறிவித்திருக்கிறார். நுண்ணறிவு மிக்க மருத்துவர்கள், மொழி நூலறிஞர்கள் இதழ் ஆசிரியர்கள், கல்லூரிப் பேராசிரியர்கள் என்று அறிவு திரண்ட பெரியோர்களைச் சுட்டு வீழ்த்தி—கன்னியரைக் கற்பழித்து —குழந்தைகளைச் சுட்டுப்பொசுக்கி நாய்க்கும் காக்கைக்கும், நரிக்கும் கழுகுக்கும் இட்ட கொடுமையைக் கண்ட பின்னரும் யார்தான் போர்த் தொழிலில் தங்களைப் பக்குவப்படுத்திக்கொள்ள விரும்பமாட்டார்கள்? 'ஏற்கனவே வங்க நாட்டு இளைஞர்கள் போர்த் தொழில் கற்கத் தொடங்கிவிட்டனர். இனி முதியோராகிய நாங்களும் அவர் வழியையே பின் தொடர்வோம்' என்று ஹமீதா பேகம் என்னும் நாவலாசிரியை வாஷிங்டன் போஸ்ட் இதழைச் சேர்ந்த லாரன்ஸ் ஸ்டெர்ன் என்பாரிடம் அறிவித்திருக்கிறார்.

நாமும் அத்தகையதோர் நிலையையே மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம். 'நட்பு மொழிகளும் பேசப்படட்டும் 'வெடி மருந்தும் காயட்டும்!' என்பதைத் தவிர நம் நிலை, பாகிஸ்தானைப் பொறுத்தவரை, வேறெதுவுமாக இருக்க இயலாது! ஏனென்றால் 'ஆயிரம் ஆண்டுப் போர்' பற்றிப் பேசிய புட்டோவுக்கும், 'ஆயிரம் ஆண்டு காலத்துக்கு நாசி சாம்ராஜயம் வாழப்போகிறது' என்று கூவிய ஹிட்லருக்கும் இடையே—ஆற்றல் ஒற்றுமை இல்லாவிட்டாலும் — 'மொழி' வார்த்தை — சொல் ஒற்றுமையை நாம் காண்கிறோம். ஆயிரம் ஆண்டு வாழும் என்ற ஹிட்லரின் 'நாசி சாம்ராஜ்யம்' பத்தாண்டுகள்கூட நிலைக்க யியலாமல் வீழ்ந்தது. புட்டோவின் போர்க் கூச்சலும் அப்படியே பதினான்கு நாட்களில் வீழ்ந்தது!

இவ்வளவு ஒற்றுமைகள் இருப்பதால், ஒற்றுமை நட்பு பற்றிப் பேச்சு வந்தால் - பேச்சு வார்த்தைகளும் நடத்துவோம், வெடிமருந்தினையும் உலர வைப்போம்! *

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்தத் தகுதிகளை நாட்டுக்கு நல்கும் நல்ல பணியில் ஈடுபட்டிருந்தார்.

நாட்டின் பல பகுதிகளிலும் அணு மின்நிலையங்கள் தோன்றுவதற்கு அடிப்படையான பல காரியங்களைத் திறம்படச் செய்து முடித்திருக்கும் பெருமை காலகாலத்துக்கும் சாராபாய் அவர்களையே சாரும். சிறப்பாக, கல்பாக்கம் அணு மின்நிலையத்தின் அமைப்பிலும், சாதனையிலும் பங்குடையவர் சாராபாய் அவர்கள்.

விஞ்ஞான மேம்பாட்டுடன் கூடிய சமுதாய முன்னேற்றம் துரிதப்பட வேண்டும் என்ற கருத்தும், அந்தக் கருத்தினைச் செயல்படுத்தும் வகையான முயற்சிகளும் கொண்டிலங்கியவர் அவர்.

ஐம்பத்தி இரண்டே வயதான இந்த விஞ்ஞான மேதை, இன்னும் பல்லாண்டுக் காலம் வாழ்ந்து நல்ல பல செயல் திறன்களின் தந்தையாக விளங்குவார் என்ற நாட்டு நல்லோரின் கணிப்பைப் பொய்யாக்கிவிட்டு மறைந்தது. ஈடுசெய்ய முடியாத இழப்பேயாகும்.

தமிழ் நாட்டைச் சேர்ந்த அம்மு சுவாமிநாதன் அவர்களது புதல்வியான திருமதி மிருணாளினி சாராபாய்க்கும், மற்றும் அவரது குடும்பத்தாருக்கும் உரிய கவலையில், உண்மையிலேயே நாடு முழு அளவுக்குப் பங்கேற்றுக் கொண்டிருக்கிறது.

★

வெற்றிமிகு புத்தாண்டின் விளக்கொளி பரவட்டும்!

இன்றே வாங்குங்கள்

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

உங்கள் புத்தாண்டை மேலும் ஒளிமயமாக்குங்கள்.

(ஒவ்வொரு வரிசைக்கும்)

முதல் பரிசு: ஒரு லட்சம் ரூபாய்

5 இரண்டாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரு. 10 ஆயிரம்	ரு.	50,000
10 மூன்ருவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரு. 5 ஆயிரம்	ரு.	50,000
50 நான்காவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரு. 1000	ரு.	50,000
1000 ஐந்தாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரு. 100	ரு.	1,00,000

மொத்தப் பரிசுகள் 4264.

மொத்தப் பரிசுத் தொகை

ரு. 14,00,000*

பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரு. 1/-தான்

குலுக்கல் நாள்: 31-1-1972

தமிழ்நாடு பரிசுச் சீட்டு இதுவரை
268 லட்சாதிபதிகளை உருவாக்கியுள்ளது.



வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு, சென்னை-9.
கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர்,
தமிழ்நாடு பரிசுச் சீட்டு திட்டம், சென்னை-2.

* 4 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது.

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3